2002 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று—31,000 வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று—உத்தரவிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டா வழங்கி—கிட்டத்தட்ட கடந்த ஐந்தாண்டு காலமாக வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால், அந்த வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட இடங்களில் வீடுகள் கட்டவே இல்லை. அவர்களுக்குப் பட்டா மட்டும்தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், சமத்துவபுரம் என்று சொல்லி தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டி ஒதுக்கியும் அங்கேயும் குடியிருக்கவில்லை. வீட்டுமனைப் பட்டா கொடுத்ததிலும் வீடு கட்டிக் குடியிருக்கவில்லை. இதையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் கவனத்தில் கொண்டுதான் அப்படிப்பட்ட வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட இடங்களுக்கு அடிப்படைத் தேவையான குடிநீர் வசதி தெரு விளக்கு வசதி, சாலைகள் வசதி, இப்படிப் பல்வேறு வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுத்தால், கண்டிப்பாக அந்த இடத்தில் தானாகவே வீடு கட்டுவதற்கு அல்லது அரசுத் திட்டங்கள் மூலமாக வீடு கட்டுவதற்கு முன்வருவார்கள், அவர்கள் குடியிருப்பதற்கு வாய்ப்பாக அமையும் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் 5 கோடி ரூபாய் ஒதுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தப் பணிகள் எல்லாம் விரைவாக நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, தேவையான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு, தேவையான இடங்களில் குடியிருப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 208, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

208—

பேருந்துகள் நிறுத்தம்

***7016—திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி நகராட்சி, ஆசாத் நகர், சுடலைமாடசாமி கோயில் முன்பு அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்காசி நகராட்சி, ஆசாத் நகர், சுடலைமாடசாமி கோயில் முன்பு ஏற்கெனவே திருநெல்வேலி போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. தற்பொழுது அப்போக்குவரத்துக் கழகத்தில் சாதாரண புறநகர்ப் பேருந்துகளும் நின்று செல்ல உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி நகராட்சி, ஆசாத் நகர், சுடலைமாடசாமி கோயில் மிகவும் புகழ்பெற்றதாகும். இங்கே பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் வருவதால், சுடலைமாடசாமி கோயில் முன்பு விரைவுப் பேருந்துகள் அனைத்தும் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுடலைமாடசாமி கோயில் முன்பாக இதற்கு முன்பு நகரப் பேருந்துகள் மட்டும்தான் நின்று சென்று வந்தன. தற்போது புறநகர்ப் பேருந்துகளும், அந்த இடத்தில், கோயில் முன்பாக, நின்று பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. இதுவே பயணிகளுக்குப் போதுமானதாக, பயணிகள் வசதிக்குப் போதுமானதாக இருக்கிறது. விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அங்கு நின்று செல்கிற அளவுக்கு பயணிகள் எண்ணிக்கை அதிகமாக இருக்காது என்று கருதுகிறோம். ஆகவே, பயணிகள் எண்ணிக்கை அங்கு கூடுதலாக வரும் என்று கருதினால், அதைப்பற்றி, அந்த உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலித்து, அந்த விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் அந்த இடத்தில் நின்று, பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 209, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.